

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஜனவரி 14, 2021 | புரட்சி 20 | முழக்கம் 1 | விலை: ரூ.3.00

## முள்ளிவாய்க்கால் நினைவகம் இடிப்பு: கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டனம்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை இலங்கை அரசு அதிகாரப்பூர்வமாக ஆணையிட்டு இரவோடு இரவாக இடித்துத் தள்ளியதை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. இது குறித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை.

2009 முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் பல்லாயிரம் தமிழர்களை இலங்கை இராணுவம் இனப்படுகொலை செய்து முடித்தது. போராளிகள் மட்டுமல்ல பொதுமக்கள், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டோரும் படுகொலைக்கு உள்ளானார்கள். சொந்த மக்களை பலி கொடுத்ததன் நினைவாக தமிழர் பகுதியான யாழ்ப்பாணத்தில் உள்ள பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னத்தைக் கூட சட்ட விரோதமானது என்று அறிவிக்கிறது இலங்கை அரசு.

தமிழர்களின் சுய நிர்ணய உரிமை, தாயக உரிமை, தமிழ்தேச உரிமை ஆகியவற்றை வலியுறுத்தி 2008இல் மாபெரும் நிகழ்வாய் நடந்த பொங்கு தமிழ் பிரகடன நினைவு கல்வெட்டு 2018இல் நினைவுத் தூணாக மாற்றி அமைக்கப்பட்டு அன்றைய துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதனை சட்ட விரோதம் என்று இலங்கை அரசு கூறுவது நியாயமற்ற ஒன்று. இந்த உரிமைகள் அய்க்கிய நாடுகளின் சர்வதேச கோட்பாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இந்த கல்வெட்டை அகற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த மாணவர்களையும் கைது செய்துள்ளது.

முன்னர் இருந்த துணைவேந்தரால் திறந்து வைக்கப்பட்டதை, இப்போது பதவிக்கு வந்துள்ள துணைவேந்தர் ஸ்ரீ சற்குணராஜா, அரசின் இந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்திருப்பது வேதனைக்குரிய ஒன்றாகும். நியாயமாக அவர் பதவி விலகி இருக்க வேண்டும். அப்படி விலகி இருந்தால், உலகின் கவனத்தை இந்தப் பிரச்சனை மேலும் கூடுதலாக ஈர்த்து இருக்கும்.

அய்.நாவின் மனித உரிமை விசாரணை ஆணையத்தில் உள்ள இலங்கை அரசு அய்.நாவில் தந்த உறுதி மொழிகளை காற்றில் பறக்கவிட்டு விட்டது.

இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு அண்மையில் சென்று அந்த நாட்டின் வெளிநாட்டுத் துறை அமைச்சரை சந்தித்தார். அவருடன், 13 ஆவது சட்டத் திருத்தத்தை அமுல்படுத்துமாறு தாம் வலியுறுத்தியதாக செய்தியாளர்களுக்குப் பேட்டியும் அளித்துள்ளார். 13ஆவது சட்டத்திருத்தம் ஈழத் தமிழர்களுக்கு அரைகுறை உரிமைகளை வழங்கியது என்றாலும் இந்திய அரசின் தலையீட்டினால் உருவாக்கப்பட்ட சட்டத்திருத்தம் ஆகும். இதை நிறைவேற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் இந்திய அரசுக்கும் உண்டு. ஆனால் இந்திய அரசின் கோரிக்கையைப் பற்றிக் கவலைப்படாமல் மாகாணங்களையே ஒழித்துவிட முடிவு செய்துவிட்டதாக இலங்கை அரசு அறிவித்தது மட்டுமின்றி, இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் இலங்கைக்கு சென்று திரும்பிய ஒரு சில நாட்களிலேயே இப்படி ஒரு நடவடிக்கையை இலங்கை அரசு எடுத்திருப்பது இந்தியாவின் தலையீட்டை நாங்கள் ஏற்க மறுக்கிறோம் என்று அவமதிக்கிற ஒரு செயலாகவே கருத வேண்டும்.

ஏற்கெனவே ஈழப்போரில் உயிர்நீத்த மாவீரர்களின் நினைவு நாளை நடத்தவும், உண்ணாநிலை என்ற அறவழிப் போராட்டம் நடத்தி உயிர்நீத்த மாவீரன் திலீபன் நினைவு நாளை அனுசரிப்பதற்கும் இலங்கை அரசு தடை போட்டது. அதன் நீட்சியாகவே இந்த இடிப்பும் இப்போது நடந்து முடிந்திருக்கிறது. இடிக்கப்பட்டது கற்களால் எழுப்பப்பட்ட நினைவுச் சின்னம் அல்ல. அந்த கல்வெட்டுக்குள் உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் உணர்வுகள் பொதிந்து நிற்கின்றன. இறுதிப் போரில் உறவுகளையும், குழந்தை களையும், நட்புகளையும் இராணுவத்தின் துப்பாக்கி களுக்கும் பீரங்கிகளுக்கும் பலிகொடுத்துவிட்டு நிற்கும் ஒரு இனத்தை இதைவிட வேறு எப்படி அவமதிக்க முடியும்? இப்படிப்பட்ட ஒரு இன வெறி அரசின் கீழ் தமிழ் மக்கள் எப்படி தொடர்ந்து குடிமக்களாக வாழ முடியும்? உலகத் தமிழர்களின் முன் இந்தக் கேள்விகள்தான் இந்த இடிப்புகளின் வழியாக எழுந்து நிற்கிறது.

(குறிப்பு: கடும் எதிர்ப்புகளைத் தொடர்ந்து மீண்டும் நினைவுச் சின்னத்தை அமைக்க இலங்கை அரசு பணிந்துள்ளது)

# 500க்கும் மேற்பட்ட தோழர்கள் கைது: இலங்கை தூதரகம் முற்றுகை

*இலங்கை தூதரகத்தை முற்றுகையிடச் சென்ற 500 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.*

முள்ளிவாய்க்காலில் இனப் படுகொலையை நடத்தி முடித்த இலங்கை அரசு, உயிர்நீத்த பொது மக்கள் - மாணவர்கள் நினைவாக யாழ் பல்கலை வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த நினைவிடத்தை புல்டோசர் வைத்து இடிக்க உத்தரவிட்டது. இந்த நினைவுச் சின்னம் சட்டவிரோதம் என்று அரசு அறிவித்தது. கடும் எதிர்ப்புக்குப் பிறகு மீண்டும் நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஒப்புதல் வழங்கியதாக செய்திகள் வந்துள்ளன. நினைவுச் சின்னம் இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் இந்த நிலையில் ஏராளமான அளவில் இராணுவத்தை பல்கலை வளாகத்தில் இலங்கை அரசு குவித்து வருகிறது. மாணவர்கள் இதைக் கண்டித்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்தை அனைத்துக் கட்சித் தலைவர் களின் ஆலோசனையோடு ம.தி.மு.க. சார்பில் வைகோ அறிவித்தார். இந்தப் போராட்டத்தையொட்டி 11.1.2021 அன்று காலை 10.30 மணியளவில் இலயோலா கல்லூரி அருகே 500க்கும் மேற்பட்ட தோழர்கள் கட்சிக் கொடிகளுடன் திரண்டிருந்தனர். தூதரகம் அருகே அமைக்கப்பட்டிருந்த மேடையில் அனைத்துக் கட்சி இயக்கங்களைச் சார்ந்த தலைவர்கள், இலங்கை அரசையும் கண்டிக்க முன்வராத இந்திய அரசையும் கண்டித்தும் உரையாற்றினர். திராவிடர் விடுதலைக் கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சென்னை மாவட்ட



திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் பெருமளவில் பங்கேற்றனர். ‘தமிழர்களின் உரிமைகளை மறுக்கும் இலங்கை தூதரகத்தை இழுத்து மூடு’ என்று முழக்கமிட்டனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில், “நினைவகம் இடிக்கப்பட்டது மட்டுமல்ல; தொடர்ந்து ஈழத் தமிழர்கள் உரிமைகளை மறுத்து, தமிழ் ஈழப் பகுதியை சிங்கள மயமாக்கி வரும் இலங்கை அரசுக்கு எதிராக இந்த முற்றுகைப் போராட்டம் நடக்கிறது” என்றார். வன்னி அரசு (வி.சி.க.), முத்தரசன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), டி.கே.எஸ். இளங்கோவன் (தி.மு.க.), ஜவாஹிருல்லா (மனித நேய மக்கள் கட்சி), வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமை கட்சி), டெஹ்லான் பாகவி (எஸ்.டி.பி.அய்.), திருமுருகன் காந்தி (மே 17) உள்ளிட்ட பலரும் கண்டன உரையாற்றினர்.

நிறைவாக வைகோ பேசினார். தொடர்ந்து அனைவரும் கைது செய்யப்பட்டு திருமண மண்டபம் ஒன்றில் வைக்கப்பட்டனர்.


**(உள்ளே – தலையங்கம்)**

## ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு கூறுகிறது

# மனுசாஸ்திரத்தை அமுல்படுத்தும் உ.பி. - கர்நாடக பா.ஜ.க. ஆட்சிகள்

***‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (ஜன. 9, 2021) தீட்டியுள்ள தலையங்கத்தின் தமிழாக்கம்.***

ஏழ்மையில் உழலும் ‘பிராமணப்’ பெண்களுக்கு உதவி செய்ய விரும்புவதாக கருநாடக அரசு கூறுகிறது. இப்படி அந்த அரசு கூறுவதால், அந்தப் பெண்களின் உண்மையான வாழ்க்கை நெருக்கடிகளுக்கும், பெண்கள் என்ற அடிப்படையிலான பாதிப்புகளுக்கும் உதவிட முன் வந்திருக்கிறது என்று நினைக்கத் தோன்றும். ஆனால் அப்படி கருநாடக அரசு கருதிப் பார்க்கவில்லை. மாறாக உண்மையான பாதிப்பு என்ற பார்வையிலிருந்து விலகி அவர்களுக்கு சமூகத்தில் மிகவும் பயன்களைக் கொண்டு வந்து சேர்க்கும் பிரச்சினைக்காக கவலை எடுத்துக் கொண்டிருக்கிறது. ‘பிராமணர்’களாகவே பிறந்த அவர்கள் காலம் முழுதும் ‘பிராமணர்’ களாகவே வாழ வேண்டும் என்பதே அரசின் கவலை. இரண்டு திட்டங்களை அறிவித்துள்ளது. ஒன்று பிராமணப் ‘பெண்கள்’ திருமணத்துக்கான உதவித் திட்டம்; மற்றொன்று அவர்கள் ‘பிராமண அர்ச்சகர்’களையே திருமணம் செய்து கொள்ள உதவிடும் திட்டம்.



Their situation cannot be compared to that of subordinated castes, who had historically been condemned to menial work, and are still deprived of opportunities and networks, or of minorities who are discriminated against in the job and housing markets, for instance. While the UP government passes a law to prevent women from marrying outside their religion, the Karnataka government offers an incentive to keep women within their caste. They are both operationalising the Manusmriti, rather than upholding the promise of the Indian Constitution.

ஜாதி அமைப்பு, ஜாதிகளுக்குள்ளே நடத்தப்படும் திருமணங்கள் வழியாகக் கட்டிக் காப்பாற்றப்பட்டு வருகிறது. அதன் வழியாக ‘ஜாதித் தூய்மை’ உறுதிபடுத்தப்படுகிறது. இப்போது ‘பிராமணப்’ பெண்கள் பிராமணர்களாகவே ‘ஜாதி தூய்மையைக் காப்பாற்ற’ அரசாங்க நிதியை செலவிட முன் வந்துள்ளது, கர்நாடக அரசு.

பிராமணப் பெண்களின் உண்மையான பாதிப்புகளுக்கு ஏதேனும் உதவி செய்ய அரசு நேர்மையாக விரும்புமானால், அவர்களின் படிப்புக்கு உதவித் தொகை வழங்கலாம்; வேலை வாய்ப்புக்கான பயிற்சிகளை வழங்கலாம்; ஒரே ஜாதிக்குள் திருமணம் செய்து வைப்பதை மாற்றி வேறு ஜாதியில் திருமணம் செய்ய உதவலாம். ஆனால், இப்போது கருநாடக அரசு அறிவித்துள்ள திட்டங்களோ இவர்களை பொருளாதார ரீதியாகவோ அல்லது சமூக ரீதியாகவோ உயர்த்தக் கூடிய திட்டமல்ல; ஜாதிக்குள் இருத்தி வைக்கும் திட்டம்; பிற ஜாதியினரைப் போலவே பிராமணர்களிலும் ஏழைகள் இருக்க முடியும்தான். ஆனால், இவர்களின் ஏழ்மைக்கு பிறந்த ஜாதி ஒரு காரணம் அல்ல; சொல்லப் போனால் பரம்பரை பரம்பரையாக இவர்கள் ஜாதியின் பெயரால் பெற்று வரும் பெருமைகள், இவர்களின் பொருளாதாரத் தடைகளை உடைத்து மேம்பாட்டையச் செய்து விடும். (Of course Brahmins can be poor, just as those from other castes, but their caste is not the reason for their poverty. If anything, their inherited social prestiege might even make up for economic hardship)

‘பிராமணப்’ பெண்களின் சமூகச் சூழலை ஒடுக்கப்பட்ட ஜாதிப் பெண்களோடு ஒப்பிட முடியாது. வரலாற்று ரீதியாக இந்தப் பெண்கள், உடல் உழைப்பாளிகளாக கீழான வேலைகளை செய்கிறவர்கள்; முன்னேறும் வாய்ப்புகள் இன்று வரை மறுக்கப்படு கிறவர்கள்; அதற்கான சமூக உறவுகளும் அவர்களுக்கு இல்லை. இன்று வரை வேலைகளில் பாகுபாடுகளையும் ஜாதி ஒதுக்குதல்களையும் சந்திக்கிறார்கள்.

உ.பி. அரசோ (பா.ஜ.க. ஆட்சி) பெண்கள் வேறு மதத்தவரைத் திருமணம் செய்ய தடை விதிக்கும் சட்டம் கொண்டு வருகிறது. கருநாடக பா.ஜ.க. ஆட்சி பெண்களை

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## கோத்தபயே மிரட்டுகிறார்!

இந்திய பிரதமர் ஒருவருக்கும் (ராஜீவ் காந்தி) இலங்கை அதிபருக்கும் (ஜெயவர்த்தனா) இடையே உருவான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை அரசு பதின் மூன்றாவது சட்டத்திருத்தத்தை ஒப்புக் கொண்டது. மிகக் குறைந்த அதிகாரங்களை மட்டுமே வழங்கக் கூடிய அந்த ஒப்பந்தத்தைக்கூட நிறைவேற்ற இப்போது கோத்தபயே தலைமையிலான இலங்கை அரசு தயாராக இல்லை.

குதிரை கீழே தள்ளி குழியையும் பறித்தது என்று சொல்வதைப்போல, 'மாகாண சுயாட்சி' என்ற அதிகாரத்தைப் பகிர முன் வராத இலங்கை அரசு, இப்போது அந்தத் தீவில் மாகாணங்களையே முற்றாக ஒழித்து ஒற்றை ஆட்சியை உருவாக்கப்போவதாக கூறிக்கொண்டிருக்கிறது. அண்மையில் இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கைப் பயணம் மேற்கொண்டு, அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சரிடம் பேசினார். அவர் பேசி விட்டு இந்தியா திரும்பிய உடனேயே யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முள்ளி வாய்க்கால் இனப் படுகொலைக்குள்ளான மக்களின் நினைவாக எழுப்பப்பட்ட நினைவுச் சின்னத்தை இடித்துத் தள்ள இலங்கை அரசு உத்தரவிட்டது. கடும் எதிர்ப்புகளுக்குப் பிறகு தனது முடிவை மாற்றிக் கொண்டு மீண்டும் நினைவுச் சின்னத்தை நிறுவிட அரசு ஒப்புக் கொண்டுள்ளதாக செய்திகள் வருகின்றன.

முள்ளி வாய்க்கால் மனித உரிமை மீறல்கள் குறித்து அய்.நா.வின் மனித உரிமை ஆணைய விசாரணை வரம்புக்குள் இலங்கை அரசு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இலங்கை மற்றும் சர்வதேச பிரதிநிதிகளைக் கொண்டு 'கலப்பு விசாரணை' நடத்த அய்.நா. முடிவெடுத்து இலங்கையும் உடன்பட்ட நிலையில் அந்த விசாரணையில் ஒரு சிறு முன்னேற்றம்கூட தென்படவில்லை. அய்.நா.வில் இந்தியாவும் ஒப்புக் கொண்ட கோரிக்கை இது. இந்த நிலையில் 13ஆவது சட்டத்திருத்தம், மனித உரிமை மீறல் விசாரணை பிரச்சினைகளை எழுப்பி, இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தியாவுக்கு உண்டு. ஆனால், இந்தியா அப்படி அழுத்தம் ஏதும் தராததோடு, இது குறித்து இலங்கை அரசு தான் முடிவெடுக்க வேண்டும் என்று தட்டிக் கழிப்பது ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகத் தமிழர்களுக்கு இழைக்கும் துரோகம்.

இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக 'நிலை மாற்றும் நீதி' (Transitional Justice) என்ற கோட்பாட்டை அய்.நா. மனித உரிமை ஆணையம் முன் வைத்தது. ஆனால், தமிழர்கள் மீது இராணுவத் தாக்குதல் இல்லை என்ற ஒன்றைத் தவிர, வேறு எந்த மாற்றமும் அங்கு ஏற்படவில்லை. 'இனப்படுகொலை' என்றால் 'இனத்தைத் திட்டமிட்டு அழிப்பது' என்ற ஒற்றை கொடுமை மட்டுமல்ல, இனத்தின் பண்பாடு, அதைக் காப்பாற்றக் கூடிய கட்டமைப்புகளை அழிப்பதும்கூட இனப்படுகொலை என்ற பட்டியலில்தான் வரும் (Structural Genocide) தமிழர்களின் அடையாளங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. தமிழர் பகுதிகளில் சிங்கள–பவுத்த கோயில்கள் கட்டப்படுகின்றன. வீதிகளுக்கு தமிழ்ப் பெயர்கள் மாற்றப்பட்டு சிங்களப் பெயர்கள் சூட்டப்படு கின்றன. தமிழர்களுக்கான 'மாகாண அடையாளங்களே' ஒழிக்கப் போவதாக அரசு அறிவிக்கிறது.

இந்த நிலையில் வரலாற்று அடிப்படையில் தமிழர்களுக்கான தாயகம், மொழி, தேசிய இன அடையாளங்கள் என்ற அடிப்படையில் ஒரு இனம் தனக்கான சுய நிர்ணய உரிமை கோரும் உரிமையை சர்வதேச சட்டங்கள் ஏற்கின்றன என்றாலும், இப்போது இது காலத்தின் மாற்றத்துக்கு ஏற்ப புதிய கோட்பாடுகளோடு விரிவாக்கப்பட்டிருக்கிறது. 'இழைக்கப் பட்ட அநீதிகளுக்கு நீதி கோருதல்' (Remedial Justice) என்பதே இந்தக் கோட்பாடு. தமிழர்களுக்கான வரலாற்று ரீதியிலான தாயகத்தை சிங்களப் பேரினவாதம் 'மகாவம்ச' புராணங்களின் அடிப்படையில் மறுத்தாலும், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரும் உரிமையை மறுக்க முடியாது. சர்வதேச விசாரணை வரம்புக்குள் இலங்கை வந்துவிட்ட பிறகு அடுத்தடுத்த அரசியல் நகர்வுகளை சர்வதேச கண்ணோட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதன் வழியாகவே அரசுக்கு நெருக்கடிகளை உருவாக்க முடியும்.

ஆனால், இலங்கையின் அதிபர் கோத்தபயே ஒரு பயங்கரவாத ஆட்சியை நடத்த விரும்புவதாகவே அண்மையில் அம்பாறையில் அவர் நிகழ்த்திய மிரட்டல் பேச்சு உணர்த்துகிறது. "பாதுகாப்புத் துறை செயலாளராக நான் இருந்தபோது தான் பயங்கரவாதத்தை (விடுதலைப் புலிகள்) ஒடுக்கினேன். அவர்கள் என்னை கொல்ல திட்டமிட்டார்கள். பின்னர் பிரபாகரனை நந்திக் கடலிலிருந்து நாய் போல் இழுத்து வந்து கதையை முடித்து வைத்தேன். சிங்கள மக்களும் புத்த பிக்குகளும் நான் பாதுகாப்புத் துறை செயலாளராக மீண்டும் மாற வேண்டுமா? அல்லது இப்போதுள்ள அதிபராக செயல்பட வேண்டுமா என்று எதை விரும்புகிறார்களோ அது போல் செயல்படுவேன்" என்று திமிரோடு மிரட்டியிருக்கிறார்.

இலங்கையில் முதன்மை எதிர்க்கட்சியான மறைந்த பிரேமதாசா மகன் தலைமையில் செயல்படும் 'சமாஜ் ஜனே பாலவேகாயா' (எஸ்ஜேபி) கட்சியும் இந்தப் பேச்சை வன்மையாகக் கண்டித்துள்ளது.

தான்தோன்றித்தனமாக எந்த சர்வதேச நெறிகளுக்கும் கட்டுப்பட மறுக்கும் சிங்களப் பேரினவாத ஆட்சிக்கு எதிராக சர்வதேச அழுத்தங்களை தீவிரப்படுத்த வேண்டியதன் அவசியத்தையே இலங்கை அரசின் செயல்பாடுகள் உணர்த்தி நிற்கின்றன.

## 'பிராமணப்' பெண்கள் சொந்த ஜாதிக்குள் திருமணம் செய்தால் கருநாடக அரசு 3 இலட்சம் உதவி

சாதியக் கட்டமைப்பு இப்போதும் உடைபடாமல் நீடிப்பதற்கு, சொந்த சாதிக்குள்ளேயே திருமணம் எனப்படும் 'அகமண முறை', ஒரு முக்கியக் காரணம் என்பதைக் கண்டறிந்தனர். அந்த அடிப் படையில், அகமண முறை உடைபட்டு, சாதி கடந்த காதல் திருமணங்கள் அதிகரிக்க வேண்டும் என்று விரும்பினர்.

அதனடிப்படையிலேயே சாதி கடந்த திருமணங்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு மாநில அரசுகள் ரூ. 2 லட்சத்து 50 ஆயிரம் வரை நிதியுதவி வழங்கி வருகின்றன. இந்நிலையில், கர்நாடக மாநில பாஜகஅரசு விதிவிலக்காக, 'பிராமணப்' பெண்கள் சொந்த சாதிக்கு உள்ளேயே திருமணம் செய்து கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு ரூ. 3 இலட்சம் நிதியுதவி அறிவித் துள்ளது. அதாவது, 'பிராமண' சமூகத்தைச் சேர்ந்த பெண்கள், சொந்த ஜாதி அர்ச்சகர்கள் மற்றும் புரோகிதர்களை திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படும் என்று கூறியுள்ளது. இந்த திட்டத்திற்கு 'மைத்ரேயி திட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சமூக, பொருளாதார ரீதியாக முன்னேறி யுள்ள 'பிராமண' சமூகத்துக்கு இந்த நிதி யுதவி கொடுப்பதற்கான தேவை என்ன, சாதிக்கு எதிராக அரசு செயல்படாமல் சாதிக்குள் திருமணம் செய்து கொண்டால் நிதியுதவி என்று அரசாங்கமே சொல்வது அரசியல் சட்டத்திற்கு எதிரானது இல்லையா? என்று கேள்விகளையும் எழுப்பியுள்ளனர். திருமணம் என்பது தனிப்பட்ட இருவரின் தேர்வாகும், இவரைத் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது பிற்போக்குத்தனமானது மட்டுமன்றி பெண் சுதந்திரத்திற்கு எதிரானது என்று காங்கிரஸ் இளைஞர் பிரிவின் தேசிய பிரச்சாரத் தலைவர் ஒய்.பி. ஸ்ரீவத்சா இதைக் கண்டித்துள்ளார். 'பிராமணப்' பெண்களின் திருமண நிதி யுதவிக்கு என்று தனியாக ரூ. 25 ஆயிரம் நிதி யுதவி வழங்கும் 'அருந்ததி' என்ற திட்டத் தையும் கர்நாடக பாஜக அரசு கொண்டு வந்துள்ளது. கருநாடக பா.ஜ.க. ஆட்சி 'பிராமண நல வாரியம்' ஒன்றையும் உருவாக்கியுள்ளது. அந்த வாரியமே இந்த அரசு திட்டங்களை அறிவித்துள்ளது. ('டைம்ஸ் ஆப் இந்தியா' கண்ட தலையங்கம் வேறு இடத்தில் வெளியிடப்பட்டுள்ளது)

## உ.பி. பாஜக அரசு அமைத்த கோ சாலையில் 12 பசுக்கள் எரிந்து பலி

உத்தரப்பிரதேசத்தில் பசுமாடுகளைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில், அம்மாநில பாஜக அரசு, ஏராளமான கோ சாலைகளை அமைத்துள்ளது. இந்த கோ சாலைகளில் பசுக் களின் பராமரிப்பு, தீவனங்களுக்காக ஒரு பெரும் தொகையையும் ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆனால், கோ சாலைகளில் நடக்கும் ஊழல் நடவடிக்கைகள் காரணமாக, பசு மாடுகள் தீவனமின்றி பட்டினியால் இறந்து போவதும், போதிய பராமரிப்பின்மைக் காரணமாக கொத்துக் கொத்தாக நோயால் செத்து மடிவதும் ஆங்காங்கே நடந்து வருகிறது. இந்நிலையில்தான், செவ்வாயன்று பாக்பத் மாவட்டம் நக்லா பாடி கிராமத்திலுள்ள கோ சாலையில் மின்கசிவால் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 12 பசுமாடுகள் பரிதாபமான முறையில் இறந்துள்ளன. 18 பசு மாடுகள் கடுமையான தீக்காயம் அடைந்துள்ளன. கோ சாலையில் இணைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் திடீரென உயர் மின்அழுத்தம் பாய்ந்ததால் விபத்து ஏற்பட்டதாக கூறப்படும் நிலையில், மேலும், இந்த சம்பவம் தொடர்பாக துணைஆட்சியர் அஜய் குமார் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.


## மாட்டுச் சாணி 'சோப்': கருநாடக அமைச்சர் உறுதி

மாட்டுச்சாணம் மற்றும் சிறுநீரில் தயாரிக்கப்பட்ட சோப்புகளை மக்கள் பயன்படுத்த வேண்டும் என பாஜகவைச் சேர்ந்த கர்நாடக மாநில கால்நடைத்துறை அமைச்சர் பிரபு சவுகான் பேசியுள்ளார்.

உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களின் வரிசையில், கர்நாடக மாநில பாஜக அரசும் மிகத் தீவிரமான முறையில் பசுமாடுகள் மீது அக்கறை செலுத்தத் துவங்கியுள்ளது. கர்நாடக மாநிலத்தில் பசுவதைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ள பாஜக அரசு, பசுவதையில் ஈடுபடுவோருக்கு 3 முதல் 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், ரூ. 50 ஆயிரம் முதல் ரூ. 10 லட்சம் வரை அபராதமும் விதிக்கப் படும் என்று பயமுறுத்தியுள்ளது.

இந்நிலையில்தான், பசுக்களை பாதுகாக்கும் கர்நாடக அரசின் நடவடிக்கைக்கு பொதுமக்களும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ள மாநில கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் பிரபு சவுகான், மாட்டுச்சாணம் மற்றும் சிறுநீரில் இருந்து தயாரிக்கப்படும் சோப்பு, ஷாம்பு, வாசனைபத்திகள் உள்ளிட்ட பொருட்களையே பொதுமக்கள் உபயோகிக்க வேண்டும் என்று பேசியுள்ளார். பசுவிலிருந்து கிடைக்கும் பால், தயிர், வெண்ணெய், நெய், உள்ளிட்ட பொருட்களை மட்டும் அதிகளவில் பயன்படுத்தும் மக்கள், அதன் சிறுநீர், சாணம் உள்ளிட்டவற்றை மட்டும் பயன்படுத்த முன்வராதது தனக்கு கவலை அளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். பிரபு சவுகானின் இந்தப் பேச்சு, சமூக வலைதளங்களில் கடும் கிண்டலுக்கும், கேலிக்கும் ஆளாகி வருகிறது.

### பொங்கல் ஒன்றே தமிழர் விழா



நான் 35 வருடங்களுக்கு முன் இந்தப் பொங்கல்தான் அறிவுக்கு ஒத்தது, தமிழர்களுக்கான பண்டிகை; தமிழர்கள் இதைத்தான் தங்களின் விழாவாகக் கொண்டாட வேண்டும். இதைத்தவிர்த்துப் பெரும்பாலான மக்களால் கொண்டாடப்பட்டுவரும் மதப் பண்டிகைகள் எல்லாம் முட்டாள்தனமான காட்டுமிராண்டித் தன்மையோடு மூட நம்பிக்கை நிறைந்தவைகளே ஆகும்; இது ஒன்றுதான் மூட நம்பிக்கை; முட்டாள் தனமற்ற அறிவிற்குப் பொருத்தமான விழாவாகும் என்று சொல்லி வருகின்றேன்.

– 'விடுதலை' 28.01.1968

பொங்கல் பண்டிகை என்பது நாள், நட்சத்திரம், மதக்கதை ஆதாரம் முதலியவை எதுவுமே இல்லாமல் தை மாதம் ஒன்றாம் தேதி என்பதாக, தை மாதத்தையும் முதல் தேதியையுமே ஆதாரமாகக் கொண்டதாகும்.

– 'விடுதலை' 13.01.1970

# அம்பலப்படுத்துகிறார், பேராசிரியர் கருணானந்தம் (4)

# ராகுல சாங்கிருத்தியாயனின் பார்ப்பனியம்

***ராகுல சாங்கிருத்தியாயன் எழுதிய 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற புதினம் ஆரியர்களை உயர்த்திப் பேசுகிறது. அதை வைத்து தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விளக்கம் தருகிறார் பேராசிரியர் கருணானந்தம். (சென்ற இதழ் தொடர்ச்சி)***

'வால்காவிலிருந்து கங்கை வரை' நூலில் பார்ப்பன கதாப்பாத்திரங்களின் வழியாக, இராகுல சாங்கிருத்தியாயன் கதைகளை கூறுகிறார். இந்த கதாபாத்திரங்களில் ஒருவர் கூட சூத்திரர் கிடையாது. கதாபாத்திரங்களில் ஒருவர்கூட இராட்சஷனோ, அசுரனோ கிடையாது. அதாவது பார்ப்பனர்களை தலைவர்களாகக் கொண்டு நூலில் கதாபாத்திரங்களை உருவாக்கியுள்ளார். இன்னும் கூற வேண்டுமானால் 3ஆவது அத்தியாயத்தில் 'அமிர்தாஷ்வன்' என்ற ஒரு பார்ப்பனன் வழியாக கதையை கூறுகிறார். அவரும் சத்ரியர்கள் செய்வது தவறு என்று கூறுகிறார். நான்காவது அத்தியாயத்தில் 'புரூகிதன்', அய்ந்தாவது அத்தியாயத்தில் 'பிரதானன்', ஆறாவது கதையில் 'அங்கீரா' இவரை மிகவும் முக்கியமான வராக கூறுகிறார். இவர்கள் அனைவருமே பார்ப்பனர்கள். குரு ஏழாவது, எட்டாவது அத்தியாயத்தில் தான் மாறுபட்டு கருத்தைக் கூறுகிறார். 'சுதர்ஷ்' என்பவனும், 'பிரவாகன்' என்பவனும் பார்ப்பனர்கள் அல்ல சத்ரியர்கள். பிரவாகனை குறிப்பிடும்போது, மக்களை ஏமாற்று வதற்காக 'பிரம்ம' மதத்தைக் கொண்டு வருகிறார் என்று குறிப்பிடுகிறார். அனைத்தும் பிரம்மம் என்ற வேதாந்த தத்துவத்தை பிரவாகன் கொண்டு வருவதாக குறிப்பிடுகிறார். வேதாந்தங்களில் வரக்கூடிய அனைத்து பாசுரங்களும், 'பார்ப்பனன் கடவுளைவிட மேலானவன். அவன் கடவுளையே கட்டுப்படுத்தக் கூடியவன். அவனுக்குத்தான் அனைத்து வழிபாடு உரிமைகளும், தானங்களும் உரியது' என்று கூறப்பட்டுள்ளது. பிரவாகன் உருவாக்கிய வேதாந்தத்தில், 'இறைதன்மை பார்ப்பனர்களுக்கு மட்டுமல்ல அனைவருக்குமே உண்டு' என்று குறிப்பிடப் படுகிறது. ஆனால், பார்ப்பனன் மட்டும் தெய்வீகமானவர்கள் என்று குறிப்பிட்டதற்கு மாறாக அனைவரும் தெய்வீகமானவர்கள் என்று குறிப்பிட்டது எந்த வகையில் ஏமாற்று வேலையாகும்? அப்போது பார்ப்பனர்கள் மட்டும் தெய்வீகமான வர்கள் என்று குறிப்பிடுவது ஏமாற்று வேலை இல்லையா ? வேதாந்தங்களின் அடிப்படையில் வந்த 'யக்ஞங்கள்' ஏமாற்று வேலை இல்லையா ? இவற்றை ஏமாற்று வேலை என்று கூறாத இராகுல சாங்கிருத்தியாயனின் கதாபாத்திரங்கள், பிரவாகனின் வேதாந்தங்கள் மட்டும் மக்களை ஏமாற்றும் பணி என்று எப்படி கூறலாம்? சத்திரியர் கூற்று சாங்கிருத்தியாயனுக்கு தவறாகிறது; பிராமணன் கூற்று சரியாகி விடுகிறது. அப்போ 'Selective consciousness' சிலவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு பேசுவது.

இவ்வளவு நிகழ்வுகளை குறிப்பிட்ட இராகுல சாங்கிருத்தியாயன், புத்தர் காலத்தை பேசுகிறார், ஆனால் புத்தரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. புத்தரின் வாயிலாக அப்போதைய சமூக சூழலை குறிப்பிடவில்லை.

இவர் சாணக்கியனை நேரடியாக குறிப்பிடவில்லை. ஆனால், சாணக்கியனின் சிஷ்யன் தான் சந்திரகுப்த மௌரியர் என்று குறிப்பிடுகிறார். புராணக் கதைகளை உண்மை என்றே உறுதிப் படுத்தி வரலாறுகளைத் திணிக்கிறார் இராகுல சாங்கிருத்தி யாயன்.

நாகானந்தம், இரத்தினாவெளி, பிரியதன்சிகா என மூன்று நாடகங்களை எழுதியவர் ஹர்ஷவர்தன். ஆனால் பாணன் தான் அவற்றை எழுதியதாகவும் ஹர்ஷன் தனது பெயரை போட்டுக்கொண்டதாகவும் சாங்கிருத்தியாயன் குறிப்பிடுகிறார். இதற்கு எங்கு ஆதாரம் உள்ளது? சாணக்கியன் தான் சந்திரகுப்தரை உருவாக்கி



**வரலாறுகளை குறிப்பிடும் இராகுல சாங்கிருத்தியாயன், ஹர்ஷவர்தன், யுவான் சுவாங்கை 'பிரயாகை மாநாட்டில்' பார்ப்பனர்கள் கொலை செய்ய முயலுவதை குறிப்பிடாமலேயே கதை எழுதியுள்ளார்!**

யதாக எங்கே ஆதாரங்கள் உள்ளது ? இவர்கள் கூறும் புராணங்களைத் தவிர வேறு ஆதாரங்கள் இல்லை. ஆனாலும் இவற்றை அப்படியே ஏற்றுக் கொள்கிறவர், ஹர்ஷனுக்கு மட்டும் விமர்சனப் பார்வையை வைக்கிறார். ஏனென்றால் பாணன் பார்ப்பனன். ஒரு கவியை அல்லது நாடகத்தை பார்ப்பனன் மட்டும் தான் இயற்றக கூடிய திறமை படைத்தவன் என்று கூற வருகிறீர்களா ? எந்தப் படைப்பும் பார்ப்பனன் தான் ஒழுங்காக படைக்க முடியும் என்ற சிந்தனையா? பார்ப்பனன் அல்லாதவர்கள் நாடகங்களை உருவாக்கவே முடியாதா ?

வரலாறுகளை குறிப்பிடும் இராகுல சாங்கிருத்தியாயன், ஹர்ஷவர்தன், யுவான் சுவாங்கை 'பிரயாகை மாநாட்டில்' பார்ப்பனர்கள் கொலை செய்ய முயலுவதை குறிப்பிடாமலேயே கதை எழுதியுள்ளார்! உள்ளூர் கன்னாசியிலும் யுவான் சுவாங்கை யும் ஹர்ஷவர்தனையும் பார்ப்பனர்களால் கொலை செய்ய முயற்சி நடக்கிறது. பந்தல் தீயிடப்படுகிறது. கத்தியுடன் ஹர்ஷவர்தனையும் யுவான் சுவாங்கையும் கொல்ல வருகிறார்கள். பிடிபட்டவர்கள் பார்ப்பனர்கள். இராகுல சாங்கிருத்தியாயன் கதைகளில் சுவாரஸ்யத்திற்காக பலவற்றை இணைத்திருப்பதைப் போல இந்த நிகழ்வையும் இணைத்திருந்தால் விறுவிறுப்பாக இருந்திருக்கும். விறுவிறுப்பான கதைகளை உருவாக்கிய இராகுல சாங்கிருத்தியாயன் பார்ப்பனர்கள் மன்னனை கொலை செய்ய முயற்சித்ததை ஏன் மறைக்கிறார் என்று புரியவில்லை. பெரிய இடதுசாரி, முற்போக்கு சிந்தனையாளராக இருந்தாலும்கூட அவருடைய பார்ப்பன உணர்வு சிலவற்றை மறைக்கத் தூண்டுகிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

'அஷ்வ கோஷ்யரைப்' பாராட்டுகிறார். எதற்காக பாராட்டுகிறார்? பிறவியில் பார்ப்பனன் என்பதற்காக பாராட்டுகிறார். பெருந்தன்மையோடு மஹாயான பௌத்தத்தை ஏற்றுக் கொண்டார் என்று குறிப்பிடுகிறார். ஆனால் உண்மை என்னவென்றால், மஹாயான பௌத்தமே பார்ப்பன ஊடுருவலால் திரிக்கப் பட்ட ஒன்று. வரலாறுகளைத் திரிப்பதில் பார்ப்பனர்கள் கைதேர்ந்தவர்கள் என்று குறிப்பிடுவதை விட்டுவிட்டு மஹாயான பௌத்தம் மிகவும் உயர்ந்தது என்றும், அதை உருவாக்கியதில் அஷ்வகோஷியருக்கு முக்கியமான பங்கும் உள்ளது என்று குறிப்பிடுகிறார். ஆனால், பவுத்தத்தை உருவாக்கிய கௌதம புத்தர், கனிஷ்கர் ஆகியோரை குறிப்பிடவில்லை. இராகுல சாங்கிருத்தியாயன் தேர்ந்தெடுக்கும் கதாபாத்திரங்கள் பார்ப்பனர்களாக இருக்கின்றனர். அவர்கள் தான் சீர்திருத்தக்காரர்கள், அடிமை முறையை மாற்ற வந்தவர்கள் போன்று கதைகளில் குறிப்பிடுகிறார். துர்முகன் என்ற கதாபாத்திரம் மூலம் 'ஹர்ஷவர்தன் ஏன் இந்த அடிமை பெண்களை விடுவிக்க கூடாது' என்று குறிப்பிடுகிறார். ஹர்ஷவர்தன் ஒரு பௌத்தர். அவனை கொலை செய்ய பல முயற்சிகள் நடந்தன. ஆனால் ஹர்ஷ்வர்தனை இறுதியான இந்து மன்னன் என்று குறிப்பிடுகிறார்கள். அதிலும் கூட குறையை பேசுகிறார். நாம் கூறுவது என்ன, 'குறைநாடி குற்றமும் நாடி அதில் மிகைநாடி' என்று கூறுகிறோம். அதை பின்பற்றுவதே இல்லை. எந்த கதைகளில் சத்ரியர்கள், பௌத்தர்கள் வருகிறார்களோ அங்கு குறை நாடுகிறார். பார்ப்பனர்கள் வரும் கதைகளில் நிறை நாடுகிறார். இது என்ன வரலாற்று அணுகுமுறை? இந்த கதைகளை வைத்துக் கொண்டு, அசுரர்களிடையே அடிமை வியாபாரம் இருந்தது, வேசித் தொழில் இருந்தது என்று கூறுவது உங்கள் சுயநலத்திற்காக அனுமானத்தின் அடிப்படையில் திரித்துக் கூறும் கற்பனைகள் அல்லவா ? வரலாறு என்பது உண்மையின் அடிப்படையில் இருக்க வேண்டும். அனுமானங்களின் அடிப்படையில் இருக்கக் கூடாது.

இராகுல சாங்கிருத்தியாயனை வரலாற்று ஆசிரியர் என்ற முறையில் பாராட்டுகிறேன். அதே சமயம் கதாசிரியர் என்ற முறையில் அவரை நான் பார்ப்பன உணர்வாளராக பார்க்கிறேன். அதிலும் குறிப்பாக கூற வேண்டுமானால், பிழைக்கத் தெரிந்த பார்ப்பன உணர்வாளராக பார்க்கிறேன். சோவியத் துடன் நட்புறவு உள்ளபோது வால்கா முதல் கங்கை வரை என்று தலைப்பை வைக்கிறீர்கள். இந்த தலைப்பே நீங்கள் அவ்வளவு நேர்மையானவர் இல்லை என்று கூறவில்லையா ? முதல் மூன்று கேள்விகளுக்கு இதிலேயே பதில் உள்ளது.

தொழிற் பிரிவுகள், அடிமை வியாபாரம் ஆகியவை அனைத்து நாகரிகங்களிலும் உள்ளன. ஆனால் நாகரிகமே இல்லாத நாடோடிகளிடம் இவை எதுவும் இருக்காது. இதை வைத்துக் கொண்டு ஆரியர்கள் மேலானவர்கள் என்று எப்படி கேள்வியைக் கேட்கிறீர்கள்? ஆரியர்கள் அரசாட்சியை நிறுவிய பிறகு எப்படி நடந்து கொண்டார்கள் என்பதல்லவா முக்கியம். ஆரிய அரசாங்கங்கள் ஏற்பட்ட பிறகு ஆரியர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைத் தானே பார்க்க வேண்டும். சூத்திரர்களைத் தீண்டத்தகாதவர்களாக மாற்றியது ஆரிய மன்னர்கள். அசுரர்களிடம் தொழில் திறமைகள் இருந்தாலும் போரிடும் திறமையில்லை. அத்தகைய போர்த் திறமை இலலாதவர்கள், ஆரியர்களிடம் தோற்கத்தானே செய்வார்கள்? இது இயற்கை தானே என்று கேள்வி கேட்கிறார்கள். போரை நீங்களே தொடங்கி நடத்தியதை வீரம் என்று நியாயப் படுத்துகிறீர்களா? நான்கு வர்ணங்களில் உழைக்கும் மக்களை நான்காவதாக ஆரியம் வைத்துள்ளது. உழைக்கும் மக்களை நான்காவதாக வைத்துவிட்டு, அசுரர்களின் சமூகக் கட்டமைப்பை நீங்கள் குற்றம் சுமத்துவதில் என்ன நியாயம் இருக்கிறது.

அசுரர்களிடம் நீங்கள் சென்றீர்களே தவிர அசுரர்கள் உங்கள் பகுதிக்கு வரவில்லை. இராவணன் ஆண்ட தென் பகுதிக்கு இராமன் சென்றான். இராவணன் அயோத்திக்கு சென்று படையெடுக்க வில்லை. மஹாபாரதமும் என்ன கூறுகிறது ? நீங்கள் பிற பகுதிகளுக்கு சென்று போரிடுகிறீர்கள். ஆக்கிரமிப்புக்காரன் யார் ? ஊடுருவல் காரன் யார் ? கோட்டை கட்டி வாழ்ந்தவன் இங்கே இருந்த உள்ளூர் மன்னன். அவன் அசுரன். அந்த கோட்டைகளை இடி வந்து தாக்கும் என்று வந்தவன் யார் ? ஆரியன் வெளியிலிருந்து வந்த நாடோடி, நாகரிக முதிர்ச்சி இல்லாதவன் காட்டுமிராண்டி. எப்போதுமே இருப்பதற்கு இடம் இல்லாமல் அலையும் இந்த இரவுடிகளுக்கு இழப்பதற்கு எதுவும் இல்லை. அவன் எந்தவிதமான முரட்டுத் தாக்குதலை யும் செய்வான். எனவே பெரிய நாகரிகங்கள் வீழ்ந்தது, முரடர்களால் தான். எகிப்திய நாகரிகம் ஹைக்சோஸ் என்ற முரடர்களிடம் வீழ்ந்தது. ரோமானிய சாம்ராஜ்யம், பார்பேரியன்கள் என்கின்ற நாகரிக மற்றவர்களிடம் வீழ்ந்தது. சிந்துவெளி நாகரிகமும் ஆரிய முரடர்களால் வீழ்ந்ததே தவிர சிந்துவெளியை விட நாகரிகம் மேம்பட்டவர்களிடம் வீழவில்லை. ஏதோ வெற்றியடைந்தவர்கள் அனைவரிடமும் உயர்ந்த பண்பு உடையதாக பேசுவது பேதைமை. எப்போதுமே நல்லதெல்லாம் வெற்றி பெறவேண்டும் என்று நாம் விரும்புகிறோம், ஆனால் வெற்றி பெரும் அனைத்தும் நல்லவை என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

(நிறைவு)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பேராசிரியர் ஜவாஹிருல்லா பேட்டி

# மனித நேய மக்கள் கட்சி – திராவிட முஸ்லிம் கட்சி

பீகார் சட்டமன்றத் தேர்தலில், தெலுங்கானாவைச் சேர்ந்த முஸ்லிம் மஜ்லிஸ்(எம்ஐஎம்) கட்சியின் தலைவர் அசாதுதீன் ஒவைசி வேட்பாளர்களை நிறுத்தி வாக்குகளை பிரித்ததால் அங்கு தேஜஸ்வி தலைமையிலான மகா கூட்டணி வெற்றிவாய்ப்பை இழந்தது. பாஜக-நிதிஷ்குமார் கூட்டணிக்கு சாதகமாக அமைந்தது. இந்நிலையில் தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் ஒவைசியின் கட்சி போட்டியிடக்கூடும் என்று ஊடகங்கள் மூலமாக செய்திகள் வெளியிடப்பட்டன. ஆனால் தமிழகத்தின் நிலைமை வடமாநிலங்களிலிருந்து முற்றாக வேறுபட்டது என்றும், தமிழகத்தில் முஸ்லிம்களை ஒன்றுதிரட்ட ஒவைசி என்ற வெளி மாநில நபர் தேவையில்லை என்றும் அப்படி ஒருவர் வந்துதான் தமிழகத்தில் முஸ்லிம்களின் உரிமைகளை மீட்டுத் தரவேண்டிய நிலைமை இல்லை என்றும் விவரிக்கிறார் மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா. ஸ்க்ரால் இணைய இதழுக்கு பேராசிரியர் ஜவஹிருல்லா பேட்டி ஒன்றை அறிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில் -

வட இந்திய மாநிலங்களை ஒப்பிடும் பொழுது தமிழகத்தில் மிக அதிகமான அளவில் மத ஒற்றுமை நிலவுகிறது. நீங்கள் எந்த ஒரு முஸ்லீம் வீட்டின் திருமணத்திற்கும் சென்று பாருங்கள். அங்கு எவ்வளவு இந்துக்கள் அந்தத் திருமணத்தில் கலந்து கொள்கின்றனர் என்பதை நீங்கள் பார்க்க முடியும். அதேபோல இந்துக்கள் திருமணத்திலும் முஸ்லிம்கள் பரவலாக பங்கேற்பதை நீங்கள் காணமுடியும். கோவிட் பெருந்தொற்று காலத்தில் எங்களது இயக்க உறுப்பினர்கள் கோவிட் நோயால் உயிரிழந்த 1600க்கும் அதிகமான மக்களின் உடல்களை அடக்கம் செய்துள்ளனர். அனைத்து மதத்தவர்களின் உடல்களையும் மதவேறுபாடு இல்லாமல் நாங்கள் அடக்கம் செய்து உள்ளோம். இதுபோன்ற ஒரு மத ஒற்றுமையை நீங்கள் வேறு எங்கு காண முடியும்?

இத்தகைய மத நல்லிணக்கம்தான் தமிழகத்தில் முஸ்லிம்கள் பொருளாதார ஏணியில் மேலே செல்வதற்கு உதவியது. நீதிக்கட்சியின் காலத்திலிருந்தே தமிழக அரசியலில் முஸ்லிம்கள் முக்கியமான பங்கை ஆற்றி வருகிறார்கள் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். திமுக/அதிமுகவில் கூட பல புகழ்பெற்ற முஸ்லீம் தலைவர்கள் இருந்தனர். இன்னும் இருக்கின்றனர். தமிழகத்தின் அரசியலில் இத்தகைய ஒரு பாரம்பரிய பின்னணி முஸ்லிம்களுக்கு இருக்கின்ற சூழலில் அவர்களுடைய நலனை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான முனைப்புகள் இங்கு குறைவாக இருக்கின்றன என்ற பேச்சுக்கே இடம் இல்லை. பாஜக ஆளுகின்ற உத்தர பிரதேசம் அல்லது பீகாரில் முஸ்லிம்களின் நலன்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படுகின்றன. அத்தகைய சூழல் தமிழகத்தில் இல்லை.

ஆனால் அதே வேளையில், முஸ்லிம்களுக்கு தமிழகத்தில் எல்லாமே முற்றிலும் சரியாக உள்ளது என்றோ அல்லது அனைத்தும் கிடைத்து விட்டன என்றோ நான் சொல்லவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மற்றும் உருது பேசுகின்ற இரு பிரிவு முஸ்லிம்கள் பிரச்சனைகளுக்காகவும் தொடர்ந்து குரல் எழுப்பப்படுகின்றது என்பதையே நான் அழுத்தமாக கூறுகிறேன். இத்தகைய நிலையில், தமிழகத்திற்கு வெளியே இருந்து ஒரு முஸ்லிம் கட்சி தமிழகத்துக்குள் வர வேண்டியதேவை உள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது. கேரளாவிலும் அசாமிலும் ஏற்கனவே வலுவான முஸ்லிம் கட்சிகள் உள்ளதால் அங்கு போட்டியிடப் போவதில்லை என ஒவைசி கூறியுள்ளார். தமிழகத்தின் சூழலும் அதிலிருந்து மாறுபடவில்லை. எங்களின் வலிமையை பிரதிபலிக்கும் இளம் முஸ்லிம்களை ஒவைசியின் செல்வாக்கு தன் பக்கம் ஈர்த்துவிடும் என்ற காரணத்தால் அவர் இங்கு வரக் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. நாங்கள் அவ்வாறு பயப்படவும் இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

நீங்கள் இன்னொன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். எங்களுக்கு வாக்களிப்பவர்கள் முஸ்லிம்கள் மட்டுமல்ல. திராவிட கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் பொழுது நாங்கள் முஸ்லிம்கள் அல்லாத வாக்குகளையும் பெறுகிறோம் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பா.ஜ.க. இந்தியா முழுவதும் வியாபித்துள்ள சூழலில் முஸ்லிம்களிடையே செயல்படும் கட்சிகள் பல மாநிலங்களில் பிரிந்து கிடக்கும் சூழல் என்பது இருக்கக் கூடாது என ஒருவர் வாதிட முடியும். **இந்த தேசத்துக்கு ஒரு தேசிய அளவிலான முஸ்லிம் கட்சி தேவை உள்ளது என்ற வாதமும் முன் வைக்கப்படுகிறது. இந்த நிலைப்பாட்டிலிருந்து நான் வேறுபடுகிறேன். இந்தியா மத ரீதியாக பன்மைத் தன்மை கொண்டது மட்டுமல்ல; ஒவ்வொரு மதத்திற்குள்ளேயும், அதேபோல இந்தியாவின் ஒவ்வொரு பிரதேச பகுதிகளுக்குள்ளேயும் கூட பன்மைத் தன்மைகள் உள்ளன. மனிதநேய மக்கள் கட்சி தமிழகத்திலுள்ள ஒரு திராவிட முஸ்லிம் கட்சியாகும். அந்த வகையில் திராவிட தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தும் ஒரு தனித்தன்மை கொண்ட இயக்கம் மனிதநேய மக்கள் கட்சி என்பதை நான் கூற விரும்புகிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.**

## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சந்தா: தோழர்களின் பாராட்டத்தக்க செயல்பாடு

- ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு பெயர் சொல்ல விரும்பாத ஒரு வாசகர் ரூ. 5,000/- நன்கொடையாக வழங்கியுள்ளார். முகநூல் வழியாக வெளிநாட்டிலிருந்து கழக ஏட்டைப் படித்து வரும் அவர், ‘வாட்ஸ்-அப்’ வழியாகக் கழகம் விடுத்த வேண்டுகோளைப் பார்த்து இந்த நன்கொடையை அனுப்பியுள்ளார். அவருக்கு நன்றி செலுத்துகிறோம்.
- திருச்செங்கோடு தம்பி தேனீர் விடுதி உரிமையாளரும் கழகத் தோழருமான மு. சோமசுந்தரம், மாதம் ரூ.1000/- நன்கொடையாக கழக ஏட்டுக்கு 2019 ஜனவரியிலிருந்து அனுப்பி வருகிறார். கடந்த ஜூன் மாதத்துக்குப் பிறகு கொரானா பாதிப்பு காரணமாக நன்கொடை அனுப்ப இயலாத நிலையில் இப்போது விடுபட்ட நிதியோடு மேலும் ரூ.4000/- சேர்த்து, ரூ.10,000/- நன்கொடையாக அனுப்பியுள்ளார். தோழரின் நன்கொடைக்கு ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சார்பில் நன்றி கூறுகிறோம்.
- கள்ளக்குறிச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் தோழர்கள் 32 இதழ்களுக்கு சந்தா சேர்த்து முகவரிகள் பட்டியலுடன் ரூ.5,800 அனுப்பியுள்ளனர். கள்ளக்குறிச்சி கழகத் தோழர்களுக்கு நன்றி.

முதல் பக்கத் தொடர்ச்சி

தங்கள் ஜாதிக்குள்ளேயே இருத்தி வைப்பதற்கு ஊக்கத் தொகை வழங்குகிறது. இரண்டு ஆட்சிகளுமே இந்திய அரசியல் சட்டம் வழங்கும் உறுதி மொழியைக் காப்பாற்றுவதை விட்டு விட்டு ‘மனுஸ்மிருதி’யை செயல்படுத்திக் கொண்டிருக் கின்றன. (They are both operationalising the Manusmirithi rather than upholding the promise of the Indian Consitution) - என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ தலையங்கம் கூறுகிறது.

‘மனுஸ்மிருதி’ இப்போது எங்கே இருக்கிறது என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனைப் பார்த்து தமிழ்நாடு பார்ப்பனர்கள் சீறிப் பாய்ந்தார்கள். இதோ, கருநாடக, உ.பி. பா.ஜ.க. ஆட்சிகளே மனுஸ்மிருதியைத் தான் அரசு திட்டங்களாக செயல்படுத்தி வருகிறது என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடே கூறுகிறது.

இதற்கு என்ன பதில்? **(செய்தி – 2ஆம் பக்கம்)**

## வினா விடை

- பசுவின் சாணியிலிருந்து தயாரிக்கும் சோப்பு மட்டுமே நாம் பயன்படுத்த வேண்டும். **– கருநாடக அமைச்சர் பிரபு சவுகான்**

  அவுங்க மட்டுமே, இனி பாஜக-வில் சேர முடியும்னு அறிவிச்சிருங்க; கட்சி ‘பொத பொதன்னு’ வளரும்!

- உ.பி அரசு நடத்திய ‘கோ சாலையில்’ மின் விபத்து ; 12 பசுக்கள் பரிதாப சாவு. **– செய்தி**

  பரவாயில்லை; யாகம் நடத்தி வேதம் ஓதி, மோட்சத்துக்கு அனுப்பினால் சரியாகிடும்.

- அஞ்சல் துறை பணியாளர் தேர்வு : மீண்டும் தமிழ் புறக்கணிப்பு. **– செய்தி**

  அடுத்து அஞ்சல் முகவரிகளிலேயே தமிழ் எழுத்துக்களுக்குத் தடை வந்துடும் போலிருக்கு!

- உலகின் கலாச்சாரத் தலைமைப் பொறுப்பை இந்தியாவே ஏற்க வேண்டும். **– செய்தி**

  ஆமாம், உலகத் தலைமைப் பதவியை நாங்களே எடுத்துக்குவோம் ; இதுவே எங்களின் உயர்ந்த கலாச்சாரம்.

- வதந்திகளை நம்ப வேண்டாம். **– பிரதமர் மோடி**

  நியாயமான பேச்சு ஜீ; அதுதான் நீங்க பேசுவதை நாங்க நம்புறதே இல்லை.

- இரஜினி மக்கள் மன்றத்துடன் காந்தி மக்கள் இயக்கத்தை இணைக்கவில்லை. **– தமிழருவி மணியன்**

  காந்தியையும் இரஜினி இரசிகராக்கியே தீருவேன் என்று முயற்சிக்காத தமிழருவிக்கு கோடான கோடி நன்றி!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 15th January 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN